# மேட்டுப்பாளையம் நகராட்சி

28.02.2020ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள
மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## <u>கூட்டப் பொருள்</u>

| | |
|---|---|
| 1. | மேட்டுப்பாளையம் நகராட்சியின் வருவாய் நிதி, குடிநீர் (ம) வடிகால் நிதி மற்றும் கல்வி நிதி 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.854/2018/பி1 |
| 2 | மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3,31,32 ஆகிய பகுதிகளில் புதிதாக தெருவிளக்குகள் அமைக்க பொதுமக்கள் புகார்கள் வந்ததன் பேரில் ஆய்வு செய்யப்பட்டு புதிதாக NEW LED விளக்குகள் அமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.6702/2018/இ1 |
| 3 | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். டி.என்.40P–1320க்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுது நீக்கம் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ. 1,50,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.258/2019/எச்1 |
| 4 | மேட்டுப்பாளையம் நகராட்சி கணினி பிரிவில் உள்ள 30 கணினிகள் உள்ளன. அனைத்து கணினிகளும் இன்டர்நெட் கனெக்ஷன் உள்ளதால் வைரஸ் ஏற்பட்டு அடிக்கடி கணினிகள் பழுதாகின்றன. ஆதலால் கடந்த ஆண்டு போடப்பட்ட ஆண்டிவைரஸ் (Anti virus) காலாவதாகிவிட்டதால் ஆண்டிவைரஸ் இல்லாமல் கணினிகள் இயங்குகின்றன. ஆதலால் அனைத்து கணினிகளுக்கும் ஆண்டிவைரஸ் போட ஆகும் உத்தேச செலவினம் ரூ.96,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு :<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. கணினி அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.603/2020/இ1 |
| 5. | இந்நகராட்சி பகுதியில் 14வது மத்திய குழு மானியம் திட்ட நிதியில் சாலைகள் அமைக்கும் பணிக்கு 28.01.2020ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோர பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி Bright adverting நிறுவனம் மூலம் விளம்பரம் செய்யப்பபட்டதற்கு தொகை ரூ.6720/– ஐ வழங்க கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, விளம்பர செய்தமைற்கு தொகை ரூ. 6720/– ஐ Bright adverting நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.154/2020/இ1 |

| | |
|---|---|
| 6. | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான 16 எண்கள் டம்பர்பிளேசர் பின்கள் (Dumper Placer bins) விநியோகம் செய்யும் பணிக்கு 19.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.<br><br>வ. எண். / ஒப்பந்ததாரர் பெயர் / விலை விபரம்<br>1 / திருவாளர் சக்தி பாடி ஓர்க்ஸ், சென்னை / ரூ.9,92,000/–<br>2 / திருவாளர் வேம்ப்ஸ் பேப்ஸ், கோவை / ரூ.9,58,400/–<br><br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் வேம்ப்ஸ் பேப்ஸ், கோவை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு :<br>1. அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதார அவசர அவசியத்தை கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். |
| 7. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு – B பிளாக் –37 நகரளவு எண். 34/1ல் 5234.2 மற்றும் 34/2ல் 33.4 ச.மீ பரப்பளவு இடத்தினை மேட்டுப்பாளையம் முழுமைத் திட்டத்தில் தொழிற்சாலை உபயோகப் பகுதியிலிருந்து குடியிருப்பு உபயோகப் பகுதியாக நிலப்பயன் கோரியதில் மன்றத் தீர்மானம் எண். 169, நாள். 30.10.2017ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் பேரில் விரிவு அபிவிருத்தி திட்டம் ஒப்புதல் தமிழ்நாடு அரசிதழில் பிரசுரமாகியுள்ள நகல் மற்றும் விரிவு அபிவிருத்தி திட்ட சுருக்கம் ஆகியன மன்றத்தின் பார்வைக்கும் விரிவு அபிவிருத்தி திட்டமாற்றத்திற்கு ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.2558/2015/எப்1 |
| 8. | மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 11 மற்றும் 31 களில் உள்ள மின்கம்கங்கள் இடமாற்றம் செய்யவும் உடைந்த கம்பங்களை மாற்றவும் மின்சார வாரியத்திற்கு விண்ணப்பம் செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு :<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பொதுமக்களுக்கு போக்குவரத்து இடையூராக இருப்பதாலும் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விண்ணப்பம் செலுத்தியதற்கு மன்ற அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.294/2020/இ1 |
| 9. | மேட்டுப்பாளையம் நகராட்சி சாமண்ணா தலைமை நீரேற்று நிலையம் தேக்கம்பட்டி ஊராட்சிப்பகுதியில் அமைந்துள்ளது. இக்கட்டிடத்திற்கான வீட்டு வரி ரூ. 18,000 (ரூபாய் பதினெட்டாயிரம் மட்டும்) தொகையை தேக்கப்பட்டி ஊராட்சிக்கு செலுத்த தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.477/2020/அ5 |
| 10. | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN40B 1483க்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுது நீக்கம் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.2,15,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.605/2020/எச்1 |

| | |
|---|---|
| 11. | மேட்டுப்பாளையம் நகராட்சி மணிநகர் பகுதியில் உள்ள நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் வகுப்பறையில் நவீன வகுப்பறை வேண்டும் என்று அப்பணியின் தலைமை ஆசிரியர் கேட்டுக்கொண்டுள்ளார். எனவே, மணிநகர் மேல்நிலைப்பள்ளியில் (Smart Class) நவீன வகுப்பறை அமைக்க ரூ.5.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் இப்பணியை நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டி ஒப்புதலுக்கு<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம். |
| 12 | மேட்டுப்பாளையம் நகராட்சி மணிநகர் பகுதியில் உள்ள நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் அப்புதிய வகுப்பறையில் தரைத்தளம் அமைத்தல் வர்ணம் அடித்தல் மேல்தளத்தில் Tiles பதித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ. 6.00 இலட்சத்திற்கு நகராட்சியின் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டி ஒப்புதலுக்கு<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். |
| 13 | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலைய பழைய மற்றும் புதிய குடிநீர்த்திட்டங்களில் உள்ள 25Hp, 125 Hp, பம்பின் பழுதுகள் அகற்றி இயக்கிக் கொடுக்கவும், பங்களாமேடு நீரேற்று நிலையத்தில் உள்ள 30 Hp பம்பின் பழுதுகள் அகற்றி இயக்கிக் கொடுக்கவும் மற்றும் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள வடிதளத்தின் வால்வுகள் ஷட்டர்கள் பழுது அகற்றவும் காப்பர்டியூப் வாங்கவும் மோட்டார்களுக்குத் தேவையான போர்டுகள் பேக்கிங் ரோப்புகள், Strainer மற்றும் உதிரிச்சாமன்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 3,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இரண்டு பம்புகள் உள்ள இடத்தில் ஒன்று பழுதானதால் மற்றொன்று தொடர்ந்து இயக்க வேண்டியுள்ளதால் அதிலும் ஏதாவது பழுது ஏற்பட்டால் குடிநீர் விநியோகம் தடைப்படும் ஆகையால் பழுதான அனைத்து பம்புகளையும் சரிசெய்யவும் பேரிங்குகள், புஸ்கள், சீலிவுகள் மாற்றி இயக்கவும் அவசியம் என்பதால் மேற்கண்ட பணிகளுக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.01469/2020/இ1 |
| 14 | மேட்டுப்பாளையம் நகராட்சி வார்டு எண்.24ல் கெண்டையூர் சமுதாய கழிப்பிடத்திற்கு தண்ணீர் வசதி செய்து தரகோரி அப்பகுதி மக்கள் கேட்டுக்கொண்டுள்ளார். அப்பகுதிக்கு புதியதாக போர்வெல் அமைத்து தண்ணீர் வசதி செய்யவும் மேலும் Ramp and hand rail கதவு மராமத்து ஆகிய பணிகளை மேற்கொள்ள ரூ.3.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பணியை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டி ஒப்புதலுக்கு<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். |
| 15 | இந்நகராட்சியில் 2020 –21 ஆம் ஆண்டிற்கு தேவைப்படும் ஏ4 காப்பியர், லீகல் காப்பியர் மற்றும் கோப்புகளுக்கு தேவைப்படும் ரேப்பர் ஷீட்கள், வெள்ளைத்தாள்கள், வரிசெலுத்தும் இரசீதுகள் தகவல் மைய படிவங்கள், அம்மா உணவகத்திற்கு தேவைப்படும் இரசீதுகள், ஆகியவை வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 10 இலட்சம் மதிப்பீட்டில் சென்ற ஆண்டு எழுதுப்பொருட்கள் செய்யப்பட்ட நிறுவனமான ஈரோடு மாவட்ட பெண்கள் எழுதுபொருட்கள் அச்சுக்கூட மற்றும் தையல் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவு சங்கம் லிட் இண்ட் 1312 நிறுவனத்திடமிருந்து வாங்கிக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.708/2018/டி1 |

| | |
|---|---|
| 16 | மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 33 வார்டுகளில் உள்ள பிரதான குழாய், பகிர்மானக் குழாய் ஆகிய குழாய்களில் ஏற்படும் உடைப்பு மற்றும் கசிவுகளை சரி செய்யும் பொருட்டு அப்பணிக்கு தேவையான குழாய்கள் மற்றும் இதர பொருட்கள் வால்வுகள் ஆகிய பணிகளை மேற்கொள்ள ரூ. 3.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் இப்பணியை நகராட்சியின் தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் இப்பணியை நகராட்சியில் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். |
| 17 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள வள்ளுவர் நகரவைத் தொடக்கப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை வேண்டும் என்று அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் அவர்களின் கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் அப்பள்ளியில் மாணவ மாணவியர்களின் பயன்படுத்தும் கழிப்பிடம் திறந்த வெளியில் உள்ள அனைத்து கட்டிடங்களுக்கு வர்ணம் பூசி தருமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். மேற்கண்ட பணியை மேற்கொள்ள மதிப்பீடு ரூ. 7.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு பணியை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். |
| 18 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.1ல் உள்ள குமரபுரம் நகராட்சி சுகாதார வளாகத்தில் மின் வசதி மற்றும் தண்ணீர் வசதிகள் மேற்கொள்ள ரூ. 80,000/–க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகளை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். |
| 19 | பொறியியல் பிரிவில் குழாய் பொருந்துனராக பணியாற்றி வரும் மா.தர்மலிங்கம் என்பவர் தான் இந்நகராட்சியில் 10.02.1993 முதல் தினக்கூலியில் பணியாற்றி வந்ததாகவும் பிறகு 07.07.2000 இல் குழாய் திருப்புனராக தொகுப்பூதியத்தில் பணி நியமனம் செய்யப்பட்டு 23.02.2006 முதல் காலமுறை ஊதியத்தில் பணியமர்த்தப்பட்டதாகவும் எனவே, பழைய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் சேர்த்து ஓய்வூதியம் வழங்குமாறு சென்னை உயர்நீதி மன்றத்தில் நகராட்சி எதிராக வழக்கு தொடர்ந்துள்ளார். எனவே, இவ்வழக்கில் நகராட்சி சார்பில் வாதாட வழக்குக் கட்டணம் ரூ. 15,000/– வழங்குமாறு வழக்கறிஞர் திரு.ந. ஆனந்த் அவர்கள் கேட்டுள்ளார். எனவே, வழக்கு கட்டணம் தொகை ரூ. 15,000/– வழக்கறிஞர்ருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.355/2020/இ2 |
| 20 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள வார்டு எண். 7ல் உள்ள சொக்கலிங்கம் பிள்ளை வீதியில் உள்ள கழிவுநீர் செல்லும் கால்வாய் மற்றும் கல்வெட்(சிறுபாலம்) மிகவும் பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் நடப்பதற்கும் மட்டும் மற்றும் வாகனங்கள் இயக்க மிகவும் சிரமப்படுகிறார்கள். மேலும் அருகில் காவலர் குடியிருப்பு பின்புறம் உள்ள கழிவுநீர் கால்வாய் மிகவும் பழுதடைந்து கழிவுநீர் சீரான முறையில் செல்லாமல் தேங்கி பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு விளைவிக்கிறது. இதனால் இங்கு கல்வெட் மற்றும் கழிவுநீர் கால்வாயினை சீரமைக்க ரூ. 2.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் பொதுநிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம். |

| | |
|---|---|
| 21 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள வார்டு எண்.16ல் உள்ள எக்ஸ்டன்சன் வீதியில் உள்ள நேதாஜி பள்ளி பின்புறம் உள்ள கழிவுநீர் கால்வாய் செல்லும் பழைய கல்வெட் மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால் கழிவுநீர் செல்லாமல் தேங்கி பொதுமக்களுக்கு சுகாதார கேடு விளைவிக்கிறது. இதனால் பொதுமக்கள் மிகவும் பாதிப்பு அடைகின்றார்கள். இதனால் இப்பகுதியில் கழிவுநீர் தேங்காமல் இருக்க பழைய கல்வெட்டியினை புதியதாக மாற்றி அமைக்க வேண்டியுள்ளது. இதற்கு ரூ. 2.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் பொது நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம். |
| 22 | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் மூன்று குடிநீர்த் திட்டங்களிலும் நீரேற்றம் செய்யப்படும் குடிநீர் நகரில் உள்ள மேல்நிலைத் தொட்டிகளில் நிரப்பப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. நீரேற்றம் செய்யப்படும் போது ஆங்காங்கே பம்பின் மெயின் மற்றும் பகிர்மானக் குழாய் உடைப்பு ஏற்படுவதை சரிசெய்யும் பொதுக்குழாய் மற்றும் பொதுக்கழிப்பிடங்களுக்கும் தேவையான உதிரிச் சாமான்கள் மற்றும் பொதுக்கழிப்பிடங்களுக்குத் தேவையான உதிரிச் சாமான்கள் வாங்கி மாற்றவும் ஆழ்துளை கிணறுகளில் உள்ள நீர்மூழ்கி மோட்டார் காயில் ரீவைண்டிங் செய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,50,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :**<br><br>**1.** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**2.** குடிநீர் அவசர அவசியம் கருதி, மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதிபெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 00360/2020/இ1 |
| 23 | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். டி.என்.40F–2273க்கு தகுதிச்சான்றுதழ் பெற வேண்டி பழுது நீக்கம் செய்யும் பணிக்கு கடந்த 28.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.<br><br><table><tr><td>வ. எண்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஒப்பந்தத் தொகை</td></tr><tr><td>1.</td><td>திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டர் ஓர்க்ஸ், ஈரோடு</td><td>ரூ. 1,29,200/–</td></tr><tr><td>2</td><td>திருவாளர் முருகன் ஆட்டோஸ், ஈரோடு</td><td>ரூ. 1,41,200/–</td></tr></table><br>மேற்கண்ட ஓப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஓப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டர் ஓர்க்ஸ் ஈரோடு. அவர்களின் ஓப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.4156/2019/எச்1 |

| | |
|---|---|
| 24 | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். டி.என்.40M–9703க்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு பழுது நீக்கம் செய்யும் பணிக்கு கடந்த 28.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. |

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை |
|---|---|---|
| 1. | திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டர் ஓர்க்ஸ், ஈரோடு | ரூ. 62,200/– |
| 2 | திருவாளர் முருகன் ஆட்டோஸ், ஈரோடு | ரூ. 70,500/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டர் ஓர்க்ஸ் ஈரோடு. அவர்களின் ஓப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.3924/2019/எச்1

| | |
|---|---|
| 25 | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். டி.என்.40M–9694க்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு பழுது நீக்கம் செய்யும் பணிக்கு கடந்த 28.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. |

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை |
|---|---|---|
| 1. | திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டர் ஓர்க்ஸ், ஈரோடு | ரூ. 56,100/– |
| 2 | திருவாளர் முருகன் ஆட்டோஸ், ஈரோடு | ரூ. 59,500/– |

மேற்கண்ட ஓப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஓப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டர் ஓர்க்ஸ் ஈரோடு. அவர்களின் ஓப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.3961/2019/எச்1

26 இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். டி.என்.38Z–4571க்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு பழுது நீக்கம் செய்யும் பணிக்கு கடந்த 28.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை |
|---|---|---|
| 1. | திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டர் ஓர்க்ஸ், ஈரோடு | ரூ. 1,23,300/– |
| 2 | திருவாளர் முருகன் ஆட்டோஸ், ஈரோடு | ரூ. 1,32,200/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டர் ஓர்க்ஸ் ஈரோடு. அவர்களின் ஓப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.4156/2019/எச்1

27 இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். டி.என்.40–0986க்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு பழுது நீக்கம் செய்யும் பணிக்கு கடந்த 28.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை |
|---|---|---|
| 1. | திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டர் ஓர்க்ஸ், ஈரோடு | ரூ. 65,000/– |
| 2 | திருவாளர் முருகன் ஆட்டோஸ், ஈரோடு | ரூ. 69,000/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டர் ஓர்க்ஸ் ஈரோடு. அவர்களின் ஓப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.4154/2019/எச்1

28 மேட்டுப்பாளையம் நகராட்சியில் கல்வி நிதி 2019–20ன் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு 28.02.2020ஆம் நாளன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்தத்தாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.29 நடூர் நகராட்சி பள்ளியில் மராமத்து பணிகள் செய்தல் | 5.00 | திரு. எம். வேலுசாமி | 4.89% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திரு. ஜி.கே.எஸ். சேதுபதி | 7.22% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | வார்டு எண்.32 மணி நகர் பள்ளியில் நவீன வகுப்பறை அமைத்தல் | 5.50 | Future era Coimbatore | 0.41% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | Eye Soft Coimbatore | 2.28% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிகளுக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

29 மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொதுநிதி 2019–20ன் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு 28.02.2020ஆம் நாளன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்தத்தாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.18 அம்பேத்கர் நகர் ஏடி காலனி, கண்ணப்பன் லே அவுட் பகுதியில் உள்ள பொதுக்கழிப்பிடத்தில் மராமத்து பணிகள் செய்தல் மற்றும் தண்ணீர் வசதி செய்தல் | 1.30 | திரு. ஜி.கே.எஸ். சேதுபதி | 4.98% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திரு. எம். வேலுசாமி | 6.25% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | வார்டு எண்.5 சந்தைப்பேட்டை அருகில் உள்ள பொதுக்கழிப்பிடத்தில் மராமத்து பணிகள் செய்தல் | 1.85 | ஸ்ரீ ஆஸ்க் சுஷ்மா இன்ஸ்பராஸ்ரட்க்சர்ஸ் | 4.92% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திரு.சி.நாகராஜ் | 6.93% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 3 | வார்டு எண். 30 கோ–ஆப்ரேடிவ் காலனி பகுதியில் புதியதாக சிறுபாலம் கட்டுதல் | 2.30 | ஸ்ரீ ஆஸ்க் சுஷ்மா இன்ஸ்பராஸ்ரட்க்சர்ஸ் | 4.88% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திரு.சி.நாகராஜ் | 7.36% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 4 | வார்டு எண்.10 எஸ்.எம்.நகர் பகுதியில் புதியதாக தரைப்பாலம் மற்றும் படித்துறை அமைத்தல் | 4.00 | ஸ்ரீ ஆஸ்க் சுஷ்மா இன்ஸ்பராஸ்ரட்க்சர்ஸ் | 4.84% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திரு.சி.நாகராஜ் | 7.34% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 5 | வார்டு எண். 8 புதிய ஆணையாளர் குடியிருப்பிற்கு தேவையான தளவாடப் பொருட்கள் வாங்குதல் | 3.00 | திரு.சி.நாகராஜ் | 4.94% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | ஸ்ரீ ஆஸ்க் சுஷ்மா இன்ஸ்பராஸ்ரட்க்சர்ஸ் | 7.54% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 6 | ஜவஹர்லால் நேரு பேருந்து நிலையத்தில் மராமத்து பணிகள் செய்தல் | 5.00 | திரு.சி.நாகராஜ் | 4.85% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | ஸ்ரீ ஆஸ்க் சுஷ்மா இன்ஸ்பராஸ்ரட்க்சர்ஸ் | 7.56% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டிற்கு அதிகமாக குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.